# பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தில் உரிச்சொற்களின் பயன்பாடு

*சி. பரமசிவம்*
முதலமாண்டு முதுகலைபட்ட மாணவன், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வெட்டுக்காடு, சேந்தமங்கலம், நாமக்கல்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783653

**ஆய்வுச் சுருக்கம்**

*சொல்லை இருவகையாக பிரிக்கலாம். அவை செய்யுளீட்ட சொற்கள், இலக்கண வகை சொற்கள். அவற்றுள் இலக்கண வகை சொற்களை பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பிரிக்கலாம். இறுதியில் இடம்பிடித்த உரிச்சொல் அகராதிக்கு முன்னோடியாக அமைந்தது என்கின்றனர் சான்றோர்கள். இவ்வகையான உரிச்சொற்களை பலசொல் ஒருபொருள் ஒரு சொல் பல பொருள் என்றெல்லாம் பிரிக்கலாம். இவ்வகையான உரிச்சொற்களில் கடி, சாயல், கலி போன்ற உரிச் சொற்கள் பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை பாடிய 2ம் பத்தில் எவ்வாறெல்லாம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வுக் கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*
***கலைச்சொற்கள்:*** *உரிச்சொல், பதிற்றுப்பத்து, கடி, சாயல், கலி.*

**முன்னுரை**

*எட்டுத்தொகை நூல்களில் ஒன்று பதிற்றுப்பத்தாகும். இது சேர மன்னர்கள் 10 பேரை பற்றி 10 புலவர்களால் பத்து பத்தாக ஆக பாடிய தொகுப்பாகும்.*

*உரிச்சொல் என்பது ஒன்றுக்கு உரிமை உடையதாக திகழும் சொல்.. ஒரு செ ால்லானது பல பொருள்களுக்கு உரிமை பூண்டு நிற்கும் போதும் உரிச்சொல் நிலையினைப் பெறுகிறது. இது பெயர் சொல்லாகவும், வினைச்சொல்லாகவும், பெயருக்கு அடைமொழியாகவும், வினைக்கு அடைமொழியாகவும், பெயருக்கும் வினைக்கும் பொதுவானதாகவும் வரும். இத்தகைய சிறப்பு மிக்க உரிச்சொல்லை எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**பதிற்றுப்பத்து**

*தமிழ் இலக்கியங்களில் பதினெண்மேற் கணக்கு நூல்களுள் எட்டுத்தொகையில் பதிற்றுப்பத்து இடம் பெற்றுள்ளன. வில்லால் அம்பு எய்வதில் சிறந்து விளங்கியதால் விற்கொடியை பெற்றும், வஞ்சியையும் தற்போதைய கரூரையும் தலைநகராகக் கொண்டிருந்த 10 சேர மன்னர்களின் பற்றி 10 புலவர்கள் 10, 10 ஆக பாடியுள்ளனர். இதில் முதல், கடை பத்து கிடைக்கவில்லை. இரண்டாம் பத்தினை குமட்டூர் கண்ணனார் சேர மன்னனாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பற்றி பாடியுள்ளார். தம்மை புகழ்ந்து பாடியதால் உடம்பற்காட்டையும் 500 ஊர்களையும் இறையிளி நிலமாகவும், தென்னாட்டு வருவாயுன் பாதியையும் இமயம் வரை படை எடுத்துச் சென்ற இமயவரம்பனிடம் பரிசாகப் பெற்றான்.*

**உரிச்சொல்**

*நால்வகை சொற்களுள் செய்யுளுக்கு மட்டுமே உரிமை பூண்டு வரும் சொற்கள் உரிச்சொற்கள் ஆகும். இது பெயர் சொல்லாகவோ, வினைச் சொல்லாகவோ, பெயருக்கு அடைமொழியாகவோ, பெயருக்கும் வினைக்கும் பொதுவானவையாக அமைந்தது உரிச்சொல்.*

**உரிச்சொல்லின் பொது இலக்கணம்**

***உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை***
***இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்***
***பெயரினும் வினையினும் மெய்தடு மாறி***

***ஒருசொல் பலபொருட்(கு) உரிமை தோன்றினும்***
***பல சொல் ஒருபொருட்(கு) உரிமை தோன்றினும்***
***பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தித்***
***தத்தம் மரபில் சென்றுநிலை மருங்கின்***
***எச்சொல் ஆயினும் பொருள்வேறு கிளத்தல்'***

*தொல்காப்பியர் உரிச்சொல்லை விரித்துக் கூறுகின்ற போது அது இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றும். பெயர் போலவும் வினை போலவும் அமைந்து அவ்விரு சொல்லாதர்க்கும் உரிமை உடையதாய் தம் பகுதிகள் திரிந்து தோன்றும். அத்தகு தன்மை கொண்ட உரிச்சொற்கள். ஒரு சொல் பல பொருளை உணர்த்தும் தன்மையாதாய் வரும். பல சொற்கள் ஒரு பொருளை உணர்த்தும் தன்மை கொண்டும் அமையும். கேட்பவனால் ஒரு சொல் முன்பு அறியப்படாததாக இருந்தால் அச்சொல்லை அறியப்பட்ட சொல்லோடு சார்த்திப் பொருளை உணர்த்தல் வேண்டும். அவ்வுரிச்சொற்கள் தமக்குரிய இயல்பில் நின்றும் தாம் பொருந்தி நிற்கும் பெயரும் வினையும் ஆகிய நிலைக்கலன்களால் வேறு வேறு பொருள்களை உணர்த்தும்.*

**கடி என்னும் உரிச்சொல்**

***தொல்காப்பியர் கடி என்னும் உரிச்சொல்லுக்கு***
***கடிஎன் கிளவி***
***வரைவே கூர்மை காப்பே புதுமை***
***விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே***

*என்ற வாய்ப்பாட்டில் கடி என்ற உரிச்சொல்லுக்கு வரைவு, கூர்மை, காப்பு (காவல்), புதுமை, விரைவு, மிகுதி! சிறப்பு என்ற பொருளை தரும் என்கிறார்.*

***"பலர்மொசிந்து ஓம்பிய திறள்பூங் கடம்பின்***
***கடியுடை முழுமுதல் துமிய ஏஎய்"***
***- (பதி.பா.11வ.12-13)***

*என்ற பாடல் வரியை ஆராயும் போது நீ பகைவர் அறன்களை அழித்து, பலர் சூழ்ந்து காத்த திரண்ட பூக்களை உடைய காவல் மிக்க கடம்ப மரத்தை என கூறும் போது "கடி" என்ற உரிச்சொல் காவல் என்ற பொருளை உணர்த்துகின்றது.*

**சிவந்த என்னும் உரிச்சொல்**

*தொல்காப்பியர் சிவந்த என்னும் உரிச் சொல்லிற்கு,*

***கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள3***
***நிறத்திரு உணர்த்தற்கும் உரிய என்ப4***

*ஆகிய இரண்டு நூற்பாக்களும் கருப்பும் சிவப்பும் என்ற உரிச்சொற்கள் வெகுலியை மட்டும் குறிப்பது அல்ல நிறத்தையும் குறிக்கிறது என குறிப்பிட்டுள்ளார்.*

***"பீர்இவப்பு பரந்த நீர்அறு நிறைமுதல்***
***சிவந்த காந்தள் முதல்சிதை, முதில்" -***
***(பதி.பா.15 வரி.10-11)***

*என்ற பாடல் வரிகளை ஆராயும் போது பழைய வீடுகளில் இருந்த நீரற்ற சால்களில் செங்காந்தளின் அடி செடி நீந்தது என்பதனை விளக்குவதற்கு "சிவந்த" என்னும் உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

**சாயல் என்னும் உரிச்சொல்**

*சாயல் என் உரிச்சொல்லிற்கு தொல்காப்பியர்*

***சாயல் மென்மை5***

*என்ற நூற்பாவில் சாயல் என்னும் உரிச்சொல் மென்மையாகிய பண்பை உணர்த்தும் என்கிறார்.*

***"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்***
***உளடினும் இனிய கூறும் இன்நகை" -***
***(பதி.16.பா.10-11)***

*என்ற பாடல் வரிகளை ஆராயும் போது அறக்கற்பினையும் அடங்கிய மென்மையான தன்மையும் ஊடற்காலத்தில் புன்முறுவலோடு இனியவை எனக் கூறும் போது "சாயல்" உரிச்சொல் மென்மையான என்ற பொருளை உணர்த்த உதவுகின்றன. மேலும்,*

***"பாலும் கொளாலும் வல்லோய்! நின்***
***சாயல் மார்பு நனி அழைத் தன்றே" -***
***(பதி.16.பா.19-20)***

*என்ற பாடல்வரிகளை ஆராயும் போது அரசனின் அகன்ற மார்பு அரசியின் துயில் கொள்ளும் பாயிலாக அமைகிறது.*

*உயர்ந்தவர்களுடைய படுக்கையாக உன் மார்பு அமைகிறது. பிரதி பலனாக அவர்கள்*

*மார்பு உனக்கு படுக்கையாக அமைகிறது. உனது மென்மையுடைய மார்பு அரசியை மிகவும் வருத்தியது. அதனால் நீ அரசிபால் விரைந்து செல்வாயாக. இதில் மென்மையுடைய மார்பு என்பதனை உரைப்பதற்கு "சாயல்" என்னும் உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

## புரை என்னும் உரிச்சொல்

*தொல்காப்பியர் புரை என்னும் உரிச்சொல்லுக்கு*

***உருஉட்கு ஆகும் புரைஉயர்(பு) ஆகும்***[6]

*இதனுள் புரை என்னும் உரிச்சொல் உயர்வு என்னும் குறிப்பு பொருளை உணர்த்தும் என்கிறார்.*

***"மண்ணுடை ஞாலத்து மன்உயிர்க்கு எஞ்சாது***
***ஈத்துக்கை தண்டாக் கைகடுந் துப்பின்***
***புரைவயின் புரைவயின் பெரிய நல்கி"***

***- (பதி.பா.16வ.35-37)***

*என்ற பாடல் வரியினை உற்று நோக்கும் போது நீ மண் அணுக்கள் செறிந்த இந்நில உலகத்தின் நிலைத்து வாழும் உயிர்க்கெல்லாம் குறைவின்றி கொடுத்து அதனால் ஈகையில் மாறாத வலிமைமிக்க கையினை கொண்டுள்ளாய். உயர்ந்த இடங்களாகிய எனக் கூறும் போது புரை என்னும் உரிச்சொல் உயர்ந்த என பொருளை விளக்குவதற்கு குறிப்பிட்டுள்ளது மேலும்,*

***"புரையோர் உன்கண் துயில்இன் பாயல்***
***பாலும் கொளாலும் வல்லோய்! நின்" -***

***(பதி.பா.16வ.13-19)***

*என்ற பாடல்வரிகளை காணும் போது உயர்ந்தவர்களுடைய படுக்கையாக உன் மார்பு அமைகிறது. பிரதிபலனாக அவர்கள் மார்பு உனக்கு படுக்கையாக அமைகிறது என்பதில் உயர்ந்தவர்களுடைய என்னும் பொருளை உணர்த்துவதற்கு "புரையோர்" என்னும் உரிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

## கலி என்னும் உரிச்சொல்

***தொல்காப்பியர் கலி என்னும் உரிச்சொல்லுக்கு***
***கம்பலை சும்மை கலியே அழுங்கல்***
***என்று இவை நான்கும் அரவப் பொருள7***

*கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் என்னும் உரிச்சொற்கள் நான்கிற்கும் ஓசை (அரவம்) என்னும் பொருளை உணர்த்தும் என்கிறார்.*

***"சீர்பெறு கலிமகில் இயம்பும் முரசின்***
***வயவர் வேந்தே? பரிசீலர் வெறுக்கை?"***

***- (பதி.பா.12.வ.20-21)***

*என்ற பாடல்வரிகளை உற்று நோக்கும் போது கலி என்ற உரிச்சொல் எவ்வாறு வந்தது என்றால் திருவிழாக்கள் நீங்குதல் அறியாதவனமாகவும் எப்போதும் முழவுகள் முழங்கிக் கொண்டிருக்கும் ஊர்களாகவும் உள்ளன என என்பதில் ஓசையை விளக்குகின்றன. இவ்வாறு உரிச்சொல் இடம் பெற்றுள்ளது. மேலும்,*

***கலிகொள் ஆயம் மலிவுதொகுபு எடுத்த8***

*என்று அகநானூற்று வரியிலும் கலி என்னும் அரவப் (ஓசை) பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

## முடிவுரை

*உரிச்சொல் என்பது ஒன்றுக்கொன்று உரிமை உடையதாக திகழும் சொல்லாகும். செவ்வியல் இலக்கியத்தில் எட்டுத்தொகையில் ஒன்றான பதிற்றுபத்தில் உள்ள இரண்டாம் பத்தில் உரிச்சொற்கள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.*

## சான்றெண் விளக்கம்


1. *முனைவர். ச. திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் சொல்லதிகாரம்,நூ.297.*
2. *மேலது., நூ.383.*
3. *மேலது., நூ.372.*
4. *மேலது., நூ.373.*
5. *மேலது., நூ.325.*
6. *மேலது., நூ.300.*
7. *மேலது., நூ.349.*
8. *அறிஞர். சுப்ரமணியன். சவே சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி - 3, பா.எ.11(4).*

**துணை நூற்பட்டியல்**

1. அறிஞர். சுப்ரமணியன். சவே - சங்க இலக்கியம் எட்டுத்தொகை தொகுதி 2, 3 மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர் தெரு, பாரிமுனை சென்னை - 600108. முதல் பதிப்பு - 21 சூன் 2010.
2. முனைவர் திருஞானசம்பந்தம்.ச - தொல்காப்பியம் சொல்லதிகாரம் கதிர்பதிப்பகம் தெற்கு வீதி, திருவையாறு - 613204 முதல் பதிப்பு - சூன் 2020.